[2013 ஏப்ரல் 16

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, துறையின் வாயிலாக அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து, பெரியார் பேருந்து நிலையத்தோடு இணைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல் அந்த இடத்தைப் போக்குவரத்துக் கழகத்தினர் பயன்படுத்துவார்கள் என்று சொன்னால் அதை எடுப்பதற்குரிய வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் பேசுகின்றபோது, ** என்ற அந்த வார்த்தைகள் அவை குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

228—

அங்கன்வாடி மையம்

***26833—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், தருவை ஊராட்சி, தருவையில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நாங்குனேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், தருவை ஊராட்சி, தருவையில், தருவை–1, தருவை–2,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தருவை—3, கண்டித்தான்குளம் என 4 முதன்மை அங்கன்வாடி மையங்களும், அணைவிரிப்பான்குளம் பகுதியில் ஒரு குறு மையமும், ஆக 5 அங்கன்வாடி மையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால், மேலும் ஒரு அங்கன்வாடி மையம் அங்கே அமைக்கத் தேவை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13 ஆம் தேதி எனது தொகுதி, மூலக்கரைப்பட்டி அருகிலே மின்னல் தாக்கியதால் சுடலை, வயது 47, முருகன், வயது 55, முத்தம்மாள் வயது 45, என்ற மூன்று பேர்களும், நேற்றையதினம் களக்காடு அருகிலே ஆறுமுகம், வயது 37, என்ற விவசாயியையும் சேர்த்து 4 பேர்களும் இறந்துவிட்டார்கள். உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அந்த 4 பேர்களுடைய குடும்பங்களுக்கும் ஒன்றரை இலட்சம் ரூபாய் கொடுத்து ஆதரவு தெரிவித்தமைக்காக எங்களுடைய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், எங்களுடைய தலைவர் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி அங்கன்வாடி மையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதற்கு சொந்தக் கட்டடம் கட்டடமாகக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்கள் எங்கெல்லாம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றனவோ, அங்கெல்லாம் அரசுக் கட்டடங்களில் இயங்குவதற்கு, அந்தந்தப் பகுதிகளிலே மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக இடம் தேர்வு செய்யப்பட்டு, அரசுக்கு கருத்துரு வருகின்றபோது, நிச்சயம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அள்ள அள்ள குறையாத அட்சயப் பாத்திரமாக அற்புதமான நிதிநிலை அறிக்கையை இப்போது தமிழகத்திற்குத் தந்து, நாளைய எதிர்கால இந்தியாவிற்கே ஒப்பற்ற நிதிநிலை அறிக்கையைத் தரப்போகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாசற்ற மக்கள் தலைவி, மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித மலர் பாதங்களைப் பணிவோடு வணங்கி, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, திரௌபதியம்மன் கோயில் தெருவிலே அமைந்திருக்கின்ற அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் ஒன்றைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பகுதியிலே, புதிய அங்கன்வாடி மையம் கட்டப்பட வேண்டும் என்றால் மாவட்ட ஆட்சியர் தலைமையில் பொதுப் பணித் துறை பொறியாளர்கள், உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள், மாவட்ட திட்ட அலுவலர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு இடத்தைத் தேர்வு செய்து, அரசுக்கு அந்தக் குழு கருத்துரு அனுப்பினால் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கவனத்துடன் ஏற்றுக்கொண்டு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.